கஞ்சா கடத்தல் வழக்கு: இருவருக்கு 3 ஆண்டுகள் சிறை

மதுரை, மார்ச் 25: தேனி மாவட்டம், கண்டமனூர் விலக்கு பகுதியில் 8 கிலோ கஞ்சா கடத்திய வழக்கில் இருவருக்கு தலா 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து, மதுரை முதலாவது போதைப் பொருள் தடுப்பு நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

தேனி மாவட்டம், கண்டமனூர் விலக்குப் பகுதியில் கடந்த 1.12.2021-இல் போலீஸார் நடத்திய வாகன சோதனையின் போது, 3 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இதுதொடர்பாக தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ராஜதானி பகுதியைச் சேர்ந்த மு.காந்திமதி (41), வரதராஜபுரத்தைச் சேர்ந்த பொ.கோகுல்நாத் (25), உத்தமபாளையத்தைச் சேர்ந்த ஞானகணேசன் ஆகியோரை கண்டமனூர் விலக்கு போலீஸார் கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை மதுரை முதலாவது போதைப் பொருள் தடுப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. விசாரணை நடைபெற்று வந்த நிலையில், ஞானகணேசன் காலமானார்.

இந்த வழக்கை செவ்வாய்க்கிழமை விசாரித்த நீதிபதி ஹரிஹரகுமார் குற்றஞ்சாட்டப்பட்ட மு.காந்திமதி, பொ.கோகுல்நாத் ஆகியோருக்கு தலா 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ. 25 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கில் அரசுத் தரப்பில் வழக்குரைஞர் கே.விஜய பாண்டியன் முன்னிலையாகி வாதிட்டார்.

மின் வாரிய ஊழியர்கள் தர்னா

மதுரை, மார்ச் 25: தங்களது பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு சார்பில், மதுரை மின் வாரியத் தலைமைப் பொறியாளர் அலுவலகம் முன் செவ்வாய்க்கிழமை தர்னா போராட்டம் நடைபெற்றது.

திமுகவின் தேர்தல் வாக்குறுதிப்படி, மின் வாரியத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள், பகுதி நேரப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும், ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு மின் வாரியம் நேரடியாக தினக்கூலி ரூ.380-ஐ வழங்க வேண்டும், காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும், மின் துறையைத் தனியார்மயமாக்கும் முயற்சிகளைக் கைவிட வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெற்றது.

மதுரை மின் வாரியத் தலைமைப் பொறியாளர் அலுவலகம் முன் மின் ஊழியர் மத்திய அமைப்பு சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தர்னா போராட்டத்தில் பங்கேற்றோர்.

மதுரை மண்டல அளவில் நடைபெற்ற இந்தப் போராட்டத்துக்கு தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநிலத் துணைத் தலைவர் எஸ். ராமச்சந்திரன் தலைமை வகித்தார். சிஐடியூ புறநகர் மாவட்டச் செயலர் கே.அரவிந்தன் போராட்டத்தைத் தொடங்கிவைத்துப் பேசினார்.

மின் ஊழியர் மத்திய அமைப்பின் திட்டச் செயலர்கள் சி.செல்வராஜ் (மதுரை), ஆர்.கருணாநிதி (சிவகங்கை), ஏ.தேவராஜ் (தேனி), ஜி.காசிநாதன் (ராமநாதபுரம்), ஆர்.ஜெயகாந்தன் (மதுரை-பொது கட்டுமான வட்டம்), டி.என்.பி.இ.ஓ.மண்டலச் செயலர் ஆர்.கோகுலவர்மன் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

மின் வாரிய மத்திய ஊழியர் அமைப்பின் மண்டலச் செயலர் எஸ்.உமாநாத் நிறைவுரையாற்றினார். காலை 10 மணி அளவில் தொடங்கிய இந்தப் போராட்டம் பிற்பகல் 5 மணி வரை நடைபெற்றது. இதில் மதுரை மண்டலத்துக்குள்பட்ட பகுதிகளைச் சேர்ந்த திரளான மின் ஊழியர்கள் பங்கேற்றனர்.

உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்க்கூடல் கருத்தரங்கம்

மதுரை, மார்ச் 25: மதுரை உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகக் கூட்டரங்கில் தமிழ்க்கூடல் கருத்தரங்கம், நூல்கள் அரங்கேற்றம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் (பொறுப்பு) முனைவர் ஔவை ந.அருள் தலைமை வகித்தார். திருச்சி தூய வளனார் கல்லூரியின் முன்னாள் பேராசிரியர் முனைவர் தி.நெடுஞ்செழியன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, 'வரலாற்று நோக்கில் தமிழில் கலைச்சொற்கள்' என்ற தலைப்பில் பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:

மொழி வளர்ச்சிக்குக் கலைச்சொற்களே அடிப்படை. எனவே, காலத்தின் தேவைக்கேற்ப கலைச்சொற்கள் உருவாக்கப்பட வேண்டும். தமிழக அரசு, தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மூலம் 33 துறைகளுக்கான கலைச்சொற்களை உருவாக்கியுள்ளது. கலைச்சொற்கள் உருவாக்கத்தில் முன்னாள் முதல்வர் அண்ணா தனி நபராக ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது என்றார் அவர்.

தமிழ் மதுரை அறக்கட்டளை நிறுவனர் சித்தார்த் பாண்டியனின் ஆய்வு நூலான 'பெரியபுராணத்தில் இயற்கை வருணனை', பரமக்குடி நீ.சு.பெருமாளின் கட்டுரை நூலான 'ஆன்மிகத்தளத்தில்புரட்சியாளர்கள்', எழுத்தாளர் க்ரீஷ் பாலாவின் 'பலவீனமான இதயம்' என்ற கவிதை நூல், எழுத்தாளர் மதுரை முரளியின் நாடக நூலான 'நட்சத்திர அந்தஸ்தைப் பெற்ற வானொலி நாடகங்கள்' ஆகியவற்றின் அரங்கேற்றம் நடைபெற்றது.

முன்னாள் தலைமை ஆசிரியர் ச.செந்தூரன், ராமநாதபுரம் செய்யது அம்மாள் கலை, அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் சி.பாலமுருகன், மதுரை தியாகராசர் கல்லூரி தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் அ.மோகனா, சிவகங்கை எழுத்தாளர் அ.ஈஸ்வரன் ஆகியோர் மதிப்புரையாற்றினர். நூலாசிரியர்கள் ஏற்புரையாற்றினர். தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், உலகத் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள், தமிழார்வலர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

உலகத் தமிழ்ச் சங்க ஆய்வறிஞர் முனைவர் சு.சோமசுந்தரி வரவேற்றார். சங்கத் தமிழ்க் காட்சிக்கூட விளக்குநர் ரெ.புஷ்பநாச்சியார் நன்றி கூறினார்.

மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் உண்டியல் காணிக்கை ரூ. 75 லட்சம்

மதுரை, மார்ச் 25: மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், துணைக் கோயில்களின் உண்டியல் காணிக்கையாக ரூ. 75 லட்சம் கிடைக்கப் பெற்றது.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், 10 துணைக் கோயில்களின் உண்டியல் காணிக்கை எண்ணும் பணி புதன்கிழமை நடைபெற்றது. இதில் ரூ. 75,48,747 கிடைத்தன. பல மாற்று பொன் இனங்கள் 257 கிராமும், பல மாற்று வெள்ளி இனங்கள் 429 கிராமும், 335 அயல்நாட்டு பணத்தாள்களும் காணிக்கையாகக் கிடைக்கப் பெற்றன.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் இணை ஆணையர் ச.கிருஷ்ணன் முன்னிலையில் காணிக்கை எண்ணும் பணி நடைபெற்றது.

குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆட்சியர் வேண்டுகோள்

மதுரை, மார்ச் 25: குடும்ப அட்டைதாரர்கள், குடும்ப உறுப்பினர்கள் மார்ச் 31-ஆம் தேதிக்குள் தொடர்புடைய நியாய விலைக் கடையில் தங்களது கைரேகையைப் பதிவு செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சியர் மா.சௌ. சங்கீதா கேட்டுக்கொண்டார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தின்படி ஏஎவ்ய், பிஎச்எச் குடும்ப அட்டைதாரர்கள், குடும்ப உறுப்பினர்களின் கைரேகைப் பதிவு 100 சதவீதம் அவசியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இதுவரை தங்களது கைரேகையைப் பதிவு செய்யாத குடும்ப அட்டைதாரர்கள், குடும்ப உறுப்பினர்கள் தொடர்புடைய நியாய விலைக் கடையில் மார்ச் 31-ஆம் தேதிக்குள் தங்களது கைரேகையைப் பதிவு செய்ய வேண்டும்.

வெளி மாநிலம், வெளி மாவட்டங்களில் பணிபுரியும் குடும்ப அட்டைதாரர்கள், குடும்ப உறுப்பினர்கள் தற்போது அவர்கள் தங்கியுள்ள பகுதியிலிருந்து பொது விநியோக அமைப்பின் ஒருங்கிணைந்த மேலாண்மை (ஐஎம்பிடிஎஸ்) மூலம் தங்களது கைரேகைகளைப் பதிவு செய்ய வேண்டும் என்றார் அவர்.

ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
சிவகங்கை கிளை: எண்.73, வடக்கு ராஜா தெரு, சிவகங்கை - 630 561

இ- ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்தினை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்தினை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI ACT) -இன் கீழ் ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் கம்பெனியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை விற்பனை செய்தல்

கடன்தாரர்: Mr.M.அன்பு, S/o.Mr.முக்கன், சக-கடன்தாரர்: Mrs.A.காயத்ரி, W/o.Mr.M.அன்பு மற்றும் ஜாமின்தாரர்: Mrs.V.சுரேஷ், S/o.Mr.வெங்கட் ராமன் ஆகியோர் ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், சிவகங்கை கிளையில் கிழக்கண்ட அசையா சொத்துக்களை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளனர். நிலுவையானது கடன் கணக்கு எண்.1891820000811-ன் கீழ் கடன் தொகையான ₹ 9,97,634/- மற்றும் 07.10.2022 முதல் வட்டி, இதர செலவுகளையும் சேர்த்து அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திருப்பி செலுத்துமாறு SARFAESI-சட்டம் 2002 பிரிவு 13(2)-ன் கீழ் 10.10.2022 அன்று மேற்கண்டவர்களுக்கு கோரிக்கை அறிவிப்பு அனுப்பியது.

கடன்தாரர் & சக-கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்டுள்ள நிலுவைத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தத் தவறியதால் நிலுவையானது கீழே குறிப்பிட்டுள்ள அடமான சொத்தினை சட்டம் பிரிவு 13(4)-ன் கீழ் 29.03.2023 அன்று சுவாதீனம் எடுத்துக்கொண்டுள்ளது.

இதனை தொடர்ந்து, சொத்தை கடக்க பெற்றிருக்கும் கடன் கொடுத்தவரான (Secured Creditor) ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் நிலுவையானது கடன் தொகையை வருவிக்கும் பொருட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ள அடமான சொத்துக்களை **"எங்கே அவைத்துள்ளதோ அங்கேயே அப்படியே" என்ற நிலையிலும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற வகையிலும்** ("as is where is" & "as is what is" condition) SARFAESI ACT 2002 பிரிவு 13(4)-ன் படியும் சொத்து மீதான கடனீட்டு உரிமை (அமலாக்கம்) விதிமுறைகள், 2002, விதி எண் 8 & 9-ன் படியும் விற்பனை செய்ய முடிவெடுத்து கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்படுகிறது. **கடன்தாரர் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை கடன் கணக்கு எண்.1891820000811-ன் கீழ்** 19.03.2025 **அன்றுள்ளபடி** ₹ 12,03,941/- ஆகும்.

இ-ஏல தேதி & நேரம்: 26.04.2025 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை விற்பனை முடியும் வரை தலா 5 நிமிடங்கள் கொண்ட கால வரையற்ற நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்

இ-டெண்டரை சமர்பிக்கும் கடைசி நாள் & நேரம்: 25.04.2025 மாலை 4.00 மணிக்கு

அசையா சொத்து விபரம்: சிவகங்கை பதிவு மாவட்டம், சிவகங்கை ஜாயிண்ட் 1 சார் பதிவு மாவட்டம் மற்றும் சிவகங்கை நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண்.121/13 பகுதி, பழைய வார்டு எண்.3, புதிய வார்டு எண்.1, **மனை எண்.57, மேலூர் ரோடு, வடக்கு பக்கம், காஞ்சிரங்கள் குழு, காஞ்சிரங்கள் கிராமம், தற்போது சிவகங்கை டவுன், சிவகங்கை தாலுகா** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 68 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 56 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் 31 அடி, தெற்கு வடக்காக மேற்கு பக்கம் 37 அடி ஆகமொத்தம் **2278 சதுர அடி அல்லது 211.71 சதுர மீட்டர் நிலம், அதிலுள்ள கட்டிடம்,** அதனுடன் அனைத்து வழிப்பாதை மற்றும் அனுபந்த உரிமைகள், அதனுடன் இணைந்த துணுக்குகளும் பகுதிகளும். சொத்தானது T.S.எண்.13/13 பகுதி, சர்வே எண்.A, பிளாக் எண்.1, தற்போதைய புதிய T.S.எண்.13/13A-ல் பரப்பு 0.1595.5 சதுர மீட்டர் பகுதியில் உள்ளது. எல்லைகள்: சிங்காராயர் வாங்கிய மனை எண்.56-க்கு தெற்கு, இடையேமேலூர் சந்திரன் யாதவா வீட்டு மனைக்கு வடக்கு, கிழக்கு மேற்கு 20 அடி அகல தெற்கு வடக்கு பொது வழிப்பாதைக்கு கிழக்கு, இடையேமேலூர் சந்திரன் யாதவா நிலத்திற்கு மேற்கு.

குறைந்தபட்ச ஏல விலை ₹ 34,70,000/- **EMD** (முன்பணம் வைப்புத்தொகை 10%) ₹ 3,47,000/- **குறைந்தபட்ச ஏல உயர்வுத்தொகை** ₹ 25,000/-

இ-ஏல நடைமுறைக்கு தொடர்புகொள்ள வேண்டிய நபர்: M/s.C1 India Pvt. Ltd., Mr.பிரபாகரன் – 74182 81709.

சொத்தினை பார்வையிட, ஏல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஏலத்தில் கலந்து கொள்ளும் நபர்கள், கிளை மேலாளர், ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், சிவகங்கை கிளை தொடர்பு எண்.04575 240096 & 89398 67163 என்ற எண்ணில் அணைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

தேதி: 22.03.2025 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001. மின்னஞ்சல் : crmd@cityunionbank.in
போன் : 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல்/நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002ன் படி

மறு-டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அறிவிப்பு

சிட்டி யூனியன் வங்கியின் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களாகிய **(1) M/s. செந்தில் ஆண்டவர் டிரேடர்ஸ், வியாபாரம் நடைபெறும் இடம் : எண்.42, SBK ஹை ஸ்கூல் ரோடு, அருப்புக்கோட்டை - 626101, விருதுநகர் மாவட்டம். (2) திருமதி ஸ்ரீ வஷ்மி கிருபா க/பெ. திரு. இ. குமரன், கதவு எண்.31, K.S. சண்முகவேல் நாடார் தெரு, அருப்புக்கோட்டை - 626101, விருதுநகர் மாவட்டம். (3) திரு. இ. குமரன், த/பெ. திரு. A. பாரதராஜன், கதவு எண்.31, K.S. சண்முகவேல் நாடார் தெரு, அருப்புக்கோட்டை - 626101, விருதுநகர் மாவட்டம். எண்.4) திரு. A. பாரதராஜன், த/பெ. திரு. அபிராஜலிங்க நாடார், கதவு எண்.31, K.S. சண்முகவேல் நாடார் தெரு, அருப்புக்கோட்டை - 626101, விருதுநகர் மாவட்டம் ஆகியோர் பெற்ற கடன் நிலுவைத் தொகை 20-03-2025 அன்றுள்ளபடி ரூ.64,93,961/- (ரூபாய் அறுபத்து நான்கு லட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஒன்று மட்டும்)** மற்றும் **21-03-2025** முதல் பின்வட்டி மற்றும் வங்கிக்கு சேரவேண்டிய வேறு ஏதேனும் பாக்கிகள், இதர செலவுகள் ஆகிய மொத்த தொகையை வருவிக்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கப் பட்டுள்ள கீழ்க்கண்ட சொத்து 2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், விதி 8(6)&9-ன் கீழ் சிட்டி யூனியன் வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரி அவர்களால் சீலிடப்பட்ட டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அடிப்படையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு : எங்களது **374-அருப்புக்கோட்டை கிளை,** உங்களில் எண்.3 கொண்டவரது வேண்டுகோளின் பேரிலும், உங்களில் எண். 2 கொண்டவர் உடன்-கடனாளியாகவும், மற்றும் உங்களில் எண். 4 கொண்டவர் ஜாமீன்தாராகவும், விளங்குவதாக (SWAYAM GRIHA - BUS BR : 501312030014663)-ன் கீழ் **10.25%** வட்டி விகிதத்தில் **31-07-2018** அன்று **ரூ.39,00,000/-** நீட்டிப்பு நிதி உதவி வழங்கியுள்ளது. இந்த கடன் கணக்கானது **20-03-2025** அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையானது **ரூ.38,85,396/- (ரூபாய் முப்பத்து எட்டு லட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து முன்னூற்று தொண்ணூற்று ஆறு மட்டும்)** ஆகும்.

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களின் விவரம்
(A. பாரதராஜன் மகன் திரு. B. குமரன்-க்கு சொந்தமான சொத்துக்கள்)

அனைத்து துண்டுகளும் மற்றும் பாகங்களும் கொண்ட நிலம், அத்துடன் அதில் உள்ள கூப்பாண்ட்ராக்சர் கட்டிடம், மற்றும் இனி கட்டப்படவிருக்கும் கட்டிடத்துடன் மனை அமைந்துள்ளது. **அயிட்டம் எண்.1 :** விருதுநகர் பதிவு மாவட்டம், அருப்புக்கோட்டை துணை பதிவு மாவட்டம், அருப்புக்கோட்டை டவுன் கோதாம், ஸ்ரீ அபிராஜலிங்கேஸ்வரர் கோவில், வடக்கு ரத வீதி, நத்தம் சர்வே எண்.160/303, பழைய கதவு எண்.53-1-135, தற்போதைய வரி அசெஸ்மெண்ட் எண்.17167, அருப்புக்கோட்டை முனிசிபல்டி வார்டு 20, மதுரை ரோடு புதிய கதவு எண். 20-11-135. பரப்பளவு 2.17 சதுர அடி உள்ளது. மனையுடன் கூடிய வீடு. கிழக்குப் பகுதியில் உள்ள வீட்டு மனையின் எல்லைகள் : வடக்கில் - ராஜமாணிக்க நாடார் மற்றும் துரைப்பாண்டி நாடார் சொத்து. கிழக்கில் - சிவன் கோயில் தெரு. தெற்கில் - கதைராஜு சொத்து. மேற்கில் - பரமசிவத்தின் சொத்து. இற்குள் மனையின் அளவுகள் : தெற்கு-வடக்காக மேற்கு பக்கம் - 29 அடி, தெற்கு-வடக்காக கிழக்கு பக்கம் - 29 அடி, கிழக்கு-மேற்காக வடக்கு பக்கம் - 72 அடி, 8 அங்குலம். கிழக்கு-மேற்காக தெற்கு பக்கம் - 73 அடி, 4 அங்குலம். முழு வீட்டு மனை. மொத்தம் 2.117 சதுர அடி ஆகும்.

அயிட்டம் எண்.2 : விருதுநகர் பதிவு மாவட்டம், அருப்புக்கோட்டை துணை பதிவு மாவட்டம், அருப்புக்கோட்டை டவுன் கோதாம், ஸ்ரீ அபிராஜலிங்கேஸ்வரர் கோவில், வடக்கு ரத வீதி, தற்போது அருப்புக்கோட்டை டவுன், மதுரை ரோடு, வார்டு எண்.20, தரை, வீட்டை, நத்தம் சர்வே எண்.160/303, பழைய முனிசிபல் வரி அசெஸ்மெண்ட் கதவு எண்.53-1-135, மற்றும் தற்போதைய முனிசிபல் வரி அசெஸ்மெண்ட் எண்.17167, பரப்பளவு 1.058½ சதுர அடி உள்ளது. புதிய கதவு எண். 20-11-135, மனையுடன் கூடிய வீடு. எல்லைகள்: வடக்கில் - ராஜமாணிக்க நாடார் மற்றும் துரைப்பாண்டி நாடார் சொத்து. கிழக்கில் - திருமேனி நாதன் மற்றும் குருசாமி சொத்து. தெற்கில் - கதைராஜு சொத்து. மேற்கில் - கருப்புராமி கோயில், தெற்கு-வடக்கு தெரு. இற்குள் மனையின் அளவுகள் : தெற்கு-வடக்காக மேற்கு பக்கம் - 29 அடி, தெற்கு-வடக்காக கிழக்கு பக்கம் - 29 அடி, கிழக்கு-மேற்காக வடக்கு பக்கம் - 36 அடி, 4 அங்குலம். கிழக்கு-மேற்காக தெற்கு பக்கம் - 36 அடி, 8 அங்குலம். மொத்தம் 1.058½ சதுர அடி ஆகும்.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ. 1,98,00,000/-
(ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று எட்டு லட்சம் மட்டும்)

மறு-டெண்டருடன் கூடிய ஏல விற்பனை விவரம்

மறு-டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதி : 21-04-2025

இடம் : சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், அருப்புக்கோட்டை கிளை, எண்.45, தெற்கு தெரு, அருப்புக்கோட்டை, விருதுநகர் - 626101. தொலைபேசி எண். 04566-223962, செல் எண். 9344023543.

மறு-டெண்டருடன் கூடிய ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

(1) விற்பனையை டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் ஏலத்தில் பங்கு கொள்ள நேரில் ஆஜராக வேண்டும் மற்றும் தங்களுக்காவே ஏலம் கேட்பதாக எழுத்துபூர்வமான ஒரு உறுதிமொழியையும் அளிக்க வேண்டும். (2) விற்பனை உடைய டெண்டர்தாரர்/ஏலம் கேட்க விரும்புவோர், டெண்டர் படிவங்களை **மேனேஜர், சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், அருப்புக்கோட்டை கிளை, எண்.45, தெற்கு தெரு, அருப்புக்கோட்டை, விருதுநகர் - 626101-ல்** பெற்றுக்கொள்ளலாம். (3) விற்பனையை டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் தங்களது விலைப்புள்ளிகளை நிர்ணயிக்கப்பட்ட டெண்டர் படிவத்தில் சீலிடப்பட்ட உறைகளில் வைத்து, அதுடன், **"சிட்டி யூனியன் பேங்க்"** என்ற பெயரில் பெறப்பட்ட நிர்ணயிக்கப்பட்டதுறைந்தபட்ச விலையின் 10% தொகைக்கான **Pay Order/ கேட்பு வரைவோலையினை** பிணை வைப்புத் தொகையாக இணைத்து **"அதிகாரபூர்வ அதிகாரி, சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்"** என முகவரியிட்டு. இங்கு அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருக்கு கூடிய ஏல விற்பனை தேதியன்று **நண்பகல் 12.00 மணி** அல்லது அதற்கு முன்னதாக சமர்பிக்க வேண்டும். (4) விற்பனுள்ள டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் சொத்தினை பார்வையிடவும் மற்றும் இதர விவரங்களுக்கும் **தொலைபேசி எண். 04566-223962, செல் எண். 9344023543ஐ தொடர்பு கொள்ளவும்.** (5) இந்த சொத்து(கள்) "இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். (6) சீலிடப்பட்ட டெண்டர்கள் விற்பனுள்ள ஆஜராகியுள்ள டெண்டர்தாரர்கள் முன்னிலையில் இங்கு அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருக்கு கூடிய ஏல விற்பனை தேதியன்று **பிற்பகல் 01.00 மணிக்கு** திறக்கப்படும். பொதுவாக, மூடப்பட்ட நிலையிலான டெண்டர் விற்பனையாக இருந்தபோதிலும், மூடப்பட்ட நிலையிலான டெண்டரில் குறிப்பிடப்பட்டுள்ள விலைப்புள்ளியைக் காட்டிலும் கூடுதலாக ஏலம் கோர விரும்புவோர்களின் விருப்பத்தின் பேரில் அதிகாரபூர்வ அதிகாரியின் கட்டளையின் பேரில் வெளிப்படையான திறந்த ஏலத்தினை நடத்திடலாம். இந்த நிலையில், அதிகபட்ச ஏலம் கோருபவருக்கே. இந்த விற்பனை வழங்கப்படும். எனினும், இந்த விற்பனை சிட்டி யூனியன் வங்கியினால் உறுதி செய்யப்பட வேண்டும். (7) வெற்றிபெறும் டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் விற்பனை விலையில் **25%** தொகையை **(பிணைவைப்புத் தொகை செலுத்தியது உள்பட) விற்பனை உறுதி செய்யப்பட்ட உடனேயே** செலுத்த வேண்டும். மீதி 75% தொகையை விற்பனை உறுதி செய்யப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள்ளாக செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்டபடி செலுத்தத் தவறினால் அவரால் செலுத்தப்பட்ட 25% தொகை முழுவதையும் அவர் இழக்க நேரிடும். (8) குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைகள் மொத்த விற்பனை தொகையும் பெற்றுக்கொண்ட பின்னரே. வெற்றி பெற்ற டெண்டர்தாரர் / ஏலதாரருக்கு அதிகாரபூர்வ அதிகாரியால் விற்பனை சான்றிதழ் (Sale Certificate) வழங்கப்படும். (9) பத்திர செலவு, பதிவுக் கட்டணம், சட்டப்படியான மற்ற செலவுகளை வெற்றிபெற்ற ஏலம்கேட்பவரே ஏற்க வேண்டும். (10) அரசு, அரசு நிறுவனம் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கான சொத்து சம்பந்தப்பட்ட சட்டபூர்வ வீட்டு வரி, மின்சாரக் கட்டணம், TDS, GST மற்றும் இதர பாக்கிகளை வெற்றிபெறும் ஏலம்கேட்பவரே செலுத்த வேண்டும். (11) எந்தவித காரணமும் கூறாமல் விலைப்புள்ளிகளை ஏற்க அல்லது நிராகரிக்க அல்லது விற்பனையை ரத்து செய்ய அதிகாரபூர்வ அதிகாரிக்கு முழு உரிமை உண்டு.

இடம் : கும்பகோணம், தேதி : 25-03-2025 **அதிகாரபூர்வ அதிகாரி**

பதிவு அலுவலகம் : எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612 001. **CIN :** L65110TN1904PLC001287, **போன் :** 0435-2402322, **ஃபேக்ஸ் :** 0435-2431746, **இணையதளம் :** www.cityunionbank.com

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
தலைமை அலுவலகம்: எண்.769, எம்பெக்ஸ் பிளாசா, 4வது தளம், பேஸ் I, துண்டாலாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002

சுவாதீன அறிவிப்பு
2002 கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள், விதி 8 (1)
(அசையா சொத்துக்களுக்கு)

கம்பெனிகளின் சட்டம் 1956-ன் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமான M/s.எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் மற்றும் கம்பெனிகளின் சட்டம் 2013 பிரிவு 2 (20) மற்றும் பேங்கிங் கம்பெனி, வங்கி ஒழுங்குமுறை சட்டம், 1949 பிரிவு 5 (C)-ன் கீழ் பதிவு அலுவலகம் 4வது தளம், பேஸ்-II, ஸ்பெஸ்ர் பிளாசா, 769, அண்ணாசாலை, சென்னை - 600 002 மற்றும் இந்தியா முழுவதும் பல்வேறு இடங்களில் கிளை அலுவலகம் கொண்டுள்ள கீழே கையொப்பமிட்டுள்ளவர் அங்கீகாரம் பெற்ற அதிகாரியாக இருக்கின்றபடியால் 2002-ம் வருடத்திய கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13(12)-ன் மற்றும் விதி 3-ன் கீழ் கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமின்தாரர்கள் / அடமானதாரர்கள் **1. திரு.மார்நாடு.N, 2. திருமதி. சுமித்ரா தேவி மார்நாடு (கணக்கு எண். 700006228185 & 700006237890)** ஆகியோர்களுக்கு **20/01/2025** தேதியிட்ட கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டு அதில் குறிப்பிட்டுள்ள **18/01/2025** அன்று வரை உள்ள நிலுவை தொகையான **ரூ.11,61,587/- (ரூபாய் பதினொரு லட்சத்து அறுபத்து ஒராயிரத்து ஐநூற்று எண்பத்து ஏழு மட்டும்)** மேலும் ஒப்பந்தத்தின் படி தொடர்புடைய வட்டி, அபராத வட்டி, கட்டணங்கள், செலவுகள் மற்றும் பல சேர்த்து இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரப்பட்டிருந்தது.

கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் கடன் தொகையை திருப்பி செலுத்த தவறியதால் குறிப்பாக கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிப்பது கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்குறிப்பிட்ட சட்டம், பிரிவு 13 (4) விதி 8-ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கீழே குறிப்பிட்டுள்ள சொத